20



# HISTORY LESSONS

FOR

## STANDARD III

BY

S. JAYAVEERASINGHAM, B. A. Hons.,
History Master,
JAFFNA HINDU COLLEGE.





# சரித்திர பாடம்

## மூன்றாம் புத்தகம்

ஆக்கியோன்

ச. ஜயவீரசிங்கம், B.A Hons.,
சரித்திர ஆசிரியர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

சகல உரிமையும் ஆசிரியர்க்குரியது.

சர்வதாரி ௵ மாசி ௴.

1949.

ALL RIGHTS RESERVED.

Price 60 Cts.



FIRST PRINTED DEC. 1947.
REPRINTED JAN. 1949.

K. Ilayaparan

# முகவுரை

நாம சர்வகலாசாலை மாணவனாக இருக்கும்பொழுது நமது தேசத்தின் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டும் என்ற அவா எம்மிடம் குடிகொண்டது. எத் துறையில் ஈடுபடலா மென்று நாம் யோசித்தபொழுது எமது தாய் மொழியாகிய தமிழில் சில புத்தகங்களை ஆக்கி மனிதரின் அறிவை விருத்திசெய்ய உதவுவது எமக்கேற்ற தொழிலென மனத்தில் தோன்றினது. அந்த நோக்கத்தை நிறைவேற்றவே இப்பொழுது மூன்றாம் வகுப்பிற் படிக்கும் சிறுவருக்கு இப் புத்தகத்தை எழுதினோம்.

நமது அரசாங்கத்தாரும் இப்பொழுது இலவசக் கல்வித் திட்டத்தையும் தாய்ப் பாஷையில் பாடங்களைக் கற்பித்தல் வேண்டு மென்ற திட்டத்தையும் விதித்துள்ளார்கள். இம்மாறுதல் ஏற்படும் நற்காலத்தில் நாமும் புதிய முறைக் கேற்பச் சில நூலையேனும் ஆக்கலாகாதா வென்று யோசித்தது இப் புத்தகம் வெளிவருவதற்கு வேறொரு காரணமாகும்.

நாம் இத் தொழிலைச் செய்து முடிக்க உதவியவர் சிலர். முதலாவதாக எமது ஏட்டுப் பிரதிகளைப் பார்வையிட்டு அவைகளிலுள்ள பிழைகளைத் திருத்தி யமைத்ததற்காக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. சோ. நடராசாவுக்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை ஆசிரியர் திரு. மு. பொன்னுத்துரை அவர்கட்கும், மதுரைப் பண்டிதர் திரு. வி. நவரத்தினம் அவர்கட்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இப் புத்தகத்தில் வரும் படங்களைச் சித்திரித்தவர் திரு. ம. கங்காதரம் ஆகும். இப் படங்களின் அச்சுப் பிரதிமை ஆக்கினவர் திரு. நைற் ஆகும். இவர்களுக்கும், சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையின் மனேஜரா யிருந்து காலஞ் சென்ற திரு. ச. பொன்னுச்சாமிக்கும் நாம் கடமைப்பட் டுள்ளோம்.

இந்நூலை ஆசிரியரும் மாணாக்கரும் சரித்திரத்தில் விருப்பமுடைய ஏனையோரும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம். இந்நூலில் ஏதாவது பிழைகள் காணப்படின் அதனை எமக்கறிவித்தால் நன்றியுடன் ஏற்றுக்கொள்வாம்.

**ச. ஜெயவீரசிங்கம்,**
சரித்திர ஆசிரியர்.

யாழ்ப்பாணம், இந்துக்கல்லூரி,
**15—11—47.**

## பாடங்களின் அட்டவணை


| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | இயக்கர், நாகர், வேடர் | 3 |
| 2. | சிங்களவர் | 5 |
| 3. | தமிழர் | 9 |
| 4. | புத்தர் பெருமான் | 12 |
| 5. | அசோகன் | 15 |
| 6. | கிரேக்கர் | 18 |
| 7. | உரோமர் | 21 |
| 8. | முகமது நபி | 24 |
| 9. | சோனகர் | 27 |
| 10. | சீனர் | 30 |
| 11. | யேசுக்கிறீஸ்துநாதர் | 33 |
| 12. | போர்த்துக்கேயர் | 35 |
| 13. | ஒல்லாந்தர் | 39 |
| 14. | ஆங்கிலேயர் | 42 |

## சரித்திர பாடம்

# மூன்ரும் புத்தகம்

## 1. இயக்கர், நாகர், வேடர்.

ஆதிகாலத்தில் இலங்கையிற் பல சாதிக ளிருந்தன என்று கதைகள் கூறுகின்றன. இராட் சதர் என்னும் சாதியார் இலங்கையில் வெகு சிறப்புட னிருந்தார்கள் என்று இராமாயணக் கதை கூறுகிறது. நாகர் என்னும் வேருெரு சாதி யாரும் இத்தீவில் வசித்தார்கள். இவர்களின் பேருக்கேற்ப பாம்புகளை வணங்கி வந்தனர்.



இயக்கன்

2. இயக்கர் என்னும் ஒரு சாதி யார் வெகு காலமாக இலங்கையில் வசித்தார்கள். இவ்வியக்கரிடம் தெய்வீகத் தன்மை யுண்டென்றும் கூறுவர். இயக்கர் தாம்விரும்பியவடி வங்களைஎடுக்கக்கூடியவர்களென்று குவெனியின் கதை தெரிவிக்கின் றது. குவெனி என்னும் இயக்கப் பெண் விஜயனை மயக்கஎண்ணி ஒரு அழகுள்ள இராசகுமாரி வேடம் பூண்டாள் என்பதே கதை.

3. இலங்கைக்கு வேடர் எப்போது வந்தார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் 3000 அல் லது 4000 வருஷங்களுக்கு முன்னர் வந்திருக்கக் கூடும். முன்ஞெருகாலத்தில் இலங்கையும் இந்தி யாவும் கடலாற் பிரிபடாமல் இருந்தன என்று சில சரித்திரங்கள் கூறுகின்றன. இப்படித்

தொடர்புள்ள காலத்தில் வேடர் தென் இந்தியாவி லிருந்து கால் நடையில் இலங்கைக்கு வந்திருக்க வேண்டும்.

4. வேடர் யார் என்பதை ஆராய்வாம். சிலர், வேடர் குவேனியின் பிள்ளைகளின் சந்ததியார் என்று கூறிவந்தனர். இக்கதையை இப்போது சரித்திர அறிஞர் நம்புவதில்லை. வேடரைப்போல நாகரீகம் குறைந்த மனிதர் தென் இந்தியாவி லுள்ள நீலகிரி மலைப் பிரதேசத்திலும், ஆபிரிக்கா விலும், அவுஸ்றேலியாவிலும் காணப்படுகிறார் கள். ஆகையால் இலங்கையில் வசிக்கும் வேடர் முன்னொருகாலத்தில் தென் இந்தியாவிலிருந்து வந்திருக்க வேண்டும்.

5. வேடர்களின் சீவிய முறையைப்பற்றி இரண்டாம் வகுப்பில் படித்துவிட்டீர்கள். இவர் கள் பெரும்பாலும் மட்டக்களப்புக்கு அருகாமை யிலுள்ள விந்தனைக்காட்டிலும், ஊவாமாகாணத்தி லும் வசிக்கிறார்கள். கடந்த சில வருடங்களாக வேடர் வேறு இடங்களுக்கும் சென்று குடியேறி யிருக்கிறார்கள்.

6. இக்காலத்தில் வேடரும் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். தமது வேட்டுவப் பாஷையை விட்டுத் தமிழையோ சிங்களத் தையோ பயின்று வருகின்றனர். சிலர் கமத் தொழிலைச் செய்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை முறைகளைச் சீர் திருத்துதல் இலங்கையிலுள்ள மற்ற மனிதரின் கடனாதல் வேண்டும்.

## அப்பியாசம்

1. இலங்கையில் பழங்காலத்தில் வசித்த சாதியினர் யார்?

2. இயக்கரைப் பற்றிச் சில வசனங்கள் கூறுக.
3. வேடர் யார்? அவர்கள் எப்போது இலங்கைக்கு வந்தனர்?
4. வேடரின் இக்கால நிலைபரம் எப்படியானது?

பின்வரும் வாக்கியங்களை நிரப்புக:

1. இவர்களின் பேருக்கேற்ப——வணங்கி வந்தனர்.
2. இயக்கர் தாம் விரும்பிய——எடுக்கக் கூடியவர்.
3. இவர்கள் இற்றைக்கு——அல்லது——வருஷங்களுக்கு முன்னர் வந்திருக்கக் கூடும்.
4. சிலர், வேடர் குவேனியின் பிள்ளைகளின்——எனக் கூறுவர்.

---

## 2. சிங்களவர்.

இந்தியாவிலே இற்றைக்கு நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னர் ஆரியர் என்னும் சாதியினர் வந்து குடியேறினர். இவர்கள் பெரும்பாலும் வட இந்தியாவிலே வாசம் செய்தார்கள். இவர்களிற் சிலர் மந்தை மேய்ப்போராகவும், சிலர் கமக்காரராகவும் இருந்தார்கள். இவர்களுக்கு இரும்பால் ஆயுதங்கள் செய்யத் தெரியும். அரசியல் முறைகளைப் பற்றியும் இவர்கள் அறிந்திருந்தார்கள்.

2. இந்த ஆரியரிற் சிலர் இலங்கைக்கு வந்து குடியேறினார்கள். 2500 வருஷங்களுக்கு முன் இவர்கள் இத்தீவிற் குடியேறினார்கள். இங்கு வந்த ஆரியரின் தலைவன் விஜயன் என்பவனாகும். இவ்விஜயன் முதலாவதாக குவேனி என்னும் இயக்கப் பெண்ணை மணந்தான். பின்னர் பாண்டிய அரசனின் புதல்வியை மணஞ் செய்தான் இவ்வாரியரின் பிற்சந்ததியாரைத் தான் சிங்களவர் எனக் கூறுவர்.

3. இலங்கையிற் சிங்களவரே எண்தொகை யிற் பெரியவர். இலங்கைச் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு சிங்களவர் ஆவர். இவர்



சிங்களக் குடும்பம்

கள் இலங்கையிற் பல பாகங்களிலும் வசிக்கிறார் கள். ஆனல் வடமாகாணத்திலும், கீழ்மாகாணத் திலும், தோட்டப்பகுதிகளிலும் தமிழர் கூடின தொகையில் வசிக்கிறார்கள்.

4. சிங்களவர் பேசும் பாஷை சிங்களம் எனப்படும். இது சமஸ்கிருதத்தையும் தமிழையும் பின்பற்றி வந்த பாஷையாகும். தமிழ் மொழியி



சிங்களவர்களின் பேரஹரா

லுள்ள சொற்கள் பல சிங்கள பாஷையிற் காண லாம். சிங்களவரில் அநேகர் புத்தசமயிகளாயிருக் கின்றனர். புத்தசமயத்தவர் சிலர், இந்துசமயப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறார்கள். இவர்

களுடைய கோயில்களைத் 'தாகபா' என்று அழைப்பர். இலங்கையிலே கண்டியிலுள்ள 'தலதா' என்னும் தேவாலயம் பிரசித்திபெற்றது.

5. பண்டைக்காலந்தொட்டு சிங்கள மன்னர் இலங்கையை ஆண்டு வந்தனர். இடையில் யாழ்ப்பாணத்தில் ஓர் தமிழர் இராச்சியம் அமைக்கப்பட்டது. இற்றைக்கு 440 வருஷங்களுக்கு முன்னர் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்து படிப்படியாகக் கரையோரப் பகுதிகளைத் தம்வசமாக்கினர். பின்னர் ஒல்லாந்தர் இவர்களைத் துரத்திவிட்டுத் தாம் கரைப்பகுதிகளை ஆண்டனர். ஆனல் கண்டி இராச்சியம் போர்த்துக்கேயர் வசமோ, ஒல்லாந்தர் வசமோ அகப்படவில்லை. இவர்கள் இருவர்பின் வந்த ஆங்கிலேயர்தான் கண்டியைத் தம் ஆட்சிக்குட்படுத்தினர். சென்ற 150 வருஷங்களாக ஆங்கிலேயரின் ஆட்சி நடைபெற்று வருகிறது.

## அப்பியாசம்

1. ஆரியரைப்பற்றிச் சில வசனங்கள் கூறுக.
2. சிங்களவருக்கும் ஆரியருக்கும் என்ன தொடர்பு?
3. சிங்களவரின் பாஷை என்ன? சமயம் என்ன?
4. சிங்கள மன்னர் எக்காலம் வரைக்கும் இலங்கையை ஆண்டனர்?
5. இப்போது இலங்கையை ஆர் ஆளுகிறூர்கள்? இனி ஆர் அரசு புரிவர்?

பின்வரும் வாக்கியங்களை நிரப்புக:

1. இவர்களுக்கு——ஆயுதங்கள், கருவிகள் செய்யத் தெரியும்.
2. இவ் விஜயன் முதலாவதாக இயக்கப்பெண்ணை——மணந்தான்.
3. இவர்கள் இலங்கையிற்——வசிக்கிறூர்கள்.
4. இவர்களுடைய கோவில்களை——என அழைப்பர்.
5. பின்னர் இவர்களை——துரத்திவிட்டுத் தாம் கரைப் பகுதிகளை ஆண்டனர்.

# 3. தமிழர்.

தமிழர் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தார்கள். எங்கிருந்து இந்தியாவிற்கு வந்தார்களென்று திடமாகக் கூற இயலாது; ஒருகாலத்தில் தமிழரின் முன்னோராகிய "திராவிடர்" என்னும் சாதியினர் இந்தியா முழுவதையும் ஆண்டனர். பின்னர் ஆரியர் என்னும் சாதியினர் வந்து திராவிடரைத் தென் இந்தியப் பகுதிகளுக்கு விரட்டிவிட்டனர்.

2. தமிழரின் நாகரீகம் மிகவும் பழமையானது. சில வருஷங்களுக்குமுன் இந்தியாவிலுள்ள சிந்துநதிப் பள்ளத்தாக்கில் பல பொருட்கள் கிண்டியெடுக்கப்பட்டன. இவ்வண்ணம் எடுக்கப்பட்ட கட்டடப்பகுதிகளாலும், பாவைகள், ஆபரணங்கள் முதலியவற்றாலும் இவர்களுடைய நாகரீகம் மிகப் பழமையானதென்று சரித்திரகாரர் கூறுகின்றனர். இற்றைக்கு 5000 அல்லது 6000 வருஷங்கட்கு முன்னரே இவர்கள் மிகவும் சீர்திருத்தம் அடைந்தனர்.

3. இத்தமிழரின் முன்னோர் ஒரு அரசனின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள். அவர்கள் செங்கட்டிகளால் கட்டின பெரிய வீடுகளில் வசித்தனர். சுகாதாரவழிக்கேற்ப வெள்ளத்தை அப்புறப்படுத்த வாய்க்கால்கள் கிண்டிவைத்தனர். இவர்கள் ஆடை ஆபரணங்கள் தரித்தனர். இவருட்சிலர் கப்பல்களிற் சென்று வியாபாரம் செய்தனரென்றும் சரித்திரகாரர் கூறுகின்றனர்.

4. ஆதிகாலத்தில் இலங்கையில் வேடர், இயக்கர், நாகர் முதலிய சாதியினர் வசித்தன

ரென்று படித்தீர்கள். பின்னர் சிங்களவரின் முன்னோராகிய ஆரியர் இத்தீவிற்கு வந்தனர். ஆரியர் வந்தபின்னர் தமிழர் இலங்கைக்கு வந்தன ரென்று சரித்திரம் கூறுகிறது. இலங்கைக்கு முதன் முதல் வந்த ஆரியரின் தலைவனான விஜயன் இரண்டாவதுமுறை பாண்டியனின் புதல்வியை மணந்தானென்று சொல்லுவர். இந்த இராச குமாரத்தியுடன் வேறு தமிழரும் வந்திருக்கவேண்டும். இவர்களுடன் இந்துசமயமும் வந்திருக்க வேண்டும்.

5. இற்றைக்கு 2000 வருஷங்களுக்கு முன் தொடங்கி இடையிடையே இந்திய அரசர் இலங்கைமீது படையெடுத்து இத்தீவைக் கைப் பற்றினர். இரண்டாவது நூற்றாண்டில் மனுநீதி தவறாத எல்லாளன் என்னும் தமிழ் அரசன் இலங்கையை ஆண்டான். இதற்குப் பின்னர் பல பாண்டிய இராச குமாரரும் சோழவம்ச அரசரும் இடையிடையே இலங்கையை ஆண்டனர்.

6. இற்றைக்கு 800வருஷங்களுக்குமுன் யாழ்ப் பாணத்தில் ஒரு தமிழ் இராச்சியம் உண்டானது. இம் மணற்றிடலை ஓர் அரசன் ஒரு குருட்டு யாழ்ப் பாடிக்கு வெகுமதியாக அளித்தானென்று ஒரு கதை யுண்டு. இந்த யாழ்ப்பாண இராச்சியம் சில காலங்களில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. யாழ்ப்பாணத்தில் அரசுபுரிந்த ஆரியசக்கரவர்த்தி களிற் சிலர் இலங்கை முழுவதையும் தம் வசப் படுத்தினரென்று சரித்திரம் கூறுகின்றது.

7. தமிழர் பெரும்பாலும் வடமாகாணத்திலும் கிழ்மாகாணத்திலுமே வசிக்கிறார்கள். இவர்கள் மிகவும் பிரயாசை உடையவர்கள். இவர்களிற்

பெரும்பான்மையோர் சைவ சமயத்தையே பின்பற்றுகிறார்கள். அநேக தமிழர் பல அரசாங்க உத்தியோகங்களைப் பார்க்கிறார்கள். தமிழ்மக்கள்



தமிழரின் கோவிற் காட்சி

இலங்கையின் முன்னேற்றத்திற்காக உழைத்து வந்திருக்கிறார்கள். இனிவருங் காலத்திலும் தமிழர் சிறப்புடையவர்களாக இருப்பார்களெனலாம்.

### அப்பியாசம்

1. தமிழரின் முன்னோர் யார்?
2. ஏன் தமிழரின் நாகரீகம் பழமையானது என்பர்?
3. திராவிடரின் நாகரீகத்தைப் பற்றிச் சில வசனங்கள் கூறுக.
4. இலங்கைக்குத் தமிழர் முதன் முதல் எப்போது வந்தனர்?
5. இடையிடையே தமிழ் அரசர் ஏன் இலங்கைக்கு வந்தனர்?
6. தமிழர் வந்ததால் இலங்கையிற் பரவின விஷயங்கள் எவை?

---

## 4. புத்தர் பெருமான்.

வட இந்தியாவிலே நேர்பாளம் என்னும் தேசத்தின் அருகேயுள்ள கபிலவஸ்து என்னும் நகரிலே சுத்தோதனன் எனப் பெயரிய ஒரு சிற்றரசன் இருந்தான். இவன் இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன்னர் அரசுபுரிந்தான். புத்தர் பெருமான் இச் சிற்றரசனின் புதல்வனுகப் பிறந்தார்.

2. புத்தர் பிறக்க முன்னரே அவருடைய தாயார் பலவிதமான நூதன கனவுகள் கண்டார். ஒரு சோதிடன், புத்தர் இருபத் தொன்பதாவது பராயத்தில் ஒரு சக்கரவர்த்தியாகவோ அல்லது ஓர் சந்நியாசியாகவோ ஆவார் என்று சாஸ்திரம் சொன்னுன். இதைக் கேட்ட சுத்தோதனன் தன் மகன் பெருஞ் சக்கரவர்த்தி ஆனுலோ என்று விரும்பினுன்.

3. சுத்தோதனனின் குடும்பப்பெயர் கௌதமர். புத்தருக்குப் பெற்ருேரால் இடப்பட்ட

பெயர் சித்தார்த்தர். சிறு பராயந் தொடக்கம் இவ்வரசகுமாரனை மிகவும் கவனத்துடன் வளர்த்து வந்தார்கள். இராசகுமாரனது கண்ணில் துன்பந் தருங் காட்சி ஒன்றும் எதிர்ப்படவில்லை. எங்கும் அவன் பார்த்தளவில் இன்பமயமாகவே இருந்தது. பராயமடைந்தவுடன் அவனுக்கேற்ற மணமுஞ் செய்துவைத்தனர். அவன் மனைவியின் பெயர் யசோதரை. அவனுக்கு ஓர் ஆண்குழந்தையும் பிறந்தது.

4. தெருவீதிகளிற் செல்லும்போது புத்தர் ஒன்றன்பின் ஒன்ருக நான்கு காட்சிகளைக் கண்டார். முதலாவதாக ஒரு வயோதிபனைக் கண்டார்; பின் ஒரு நோயாளியைக் கண்டார்; மூன்ருவதாக ஒரு பிரேதத்தைக் கண்டார். இம்மூன்று காட்சிகளும் அவரை உலக சீவியத்தை வெறுக்கப் பண்ணின. நான்காவதாக ஒரு சந்நியாசியைக் கண்டார். 'ஊழிற் பெருவலி யாவுள' என்னும் வாக்கியத்திற் கேற்பத் தானும் சந்நியாசி யாவதென்று எண்ணினர். ஓர் இரவு தன் மனைவியையும் குழந்தையையும் பிரிந்து காட்டுக்குப் போய்விட்டார்.

5. காட்டிலே சிலகாலமாகக் கடுமையான விரதங்களை மேற்கொண்டனர். அவையாற் பலனில்லாமற் போகத் தியானம் செய்தார். தியானவழியாக உண்மையான அறிவைப்பெற்ருர். புத்தியையுணர்த்துபவர் என்பதால் புத்தர் என்னும் காரணப்பெயர் இவருக்கு அளிக்கப்பட்டது. தாம் அறிந்த அறிவை மனிதருக்குப் போதித்து அவர்களை மேம்படுத்த வேண்டும் என யோசித்தார். இந்த எண்ணத்தினற் பல இடங்களுக்

கும் போய்த் தனது கொள்கைகளைப் போதித்தார். இவருடைய போதனைகளை அனுசரிப்பவர்களே பௌத்தராவர்.

6. சிறுபராயத்தில் புத்தரும் இந்துசமயத்தையே பின்பற்றினவர். ஆனால் இந்துசமயக் கொள்கைகளிற் சில இவருக்கு ஏற்றனவாய்க்



புத்தர் பெருமான்

காணப்படவில்லை. புத்தர் பலியிடுதல், சாதிக்கட்டுப்பாடு முதலியவற்றிற்கு மாறாகப் போதனை செய்தார். இவர் எண்பதாவது வயசில் மரண

மடைந்தார். இந்தியாவிற் பல பகுதிகளில் இவர் உண்டாக்கின சமயம் பரவிற்று. இவருடைய போதனைகளை முதல் பாளி என்னும் பாஷையில் எழுதினார்கள். பௌத்தரிற் சிலர் புத்தரை ஒரு தெய்வமாக மதித்து வணங்குகின்றனர்.

### அப்பியாசம்

1. புத்தர் பிறந்த இடம் எது?
2. புத்தர் என்னும் பெயர் சித்தார்த்தருக்கு அளிக்கப்பட்டது ஏன்?
3. சுத்தோதனனுக்குச் சோதிடன் சொன்னதென்ன? அவன் சொன்ன சோதிடம் சரியா?
4. புத்தர் கண்ட நான்கு காட்சிகள் யாவை?
5. புத்தரின் போதனைகளுட் சிலவற்றைக் கூறுக.

பின்வரும் வாக்கியங்களை நிரப்புக:

1, புத்தர்பெருமான் —— புதல்வன்.
2. எங்கும் அவன் பார்த்தளவில் ——இருந்தது.
3. மூன்றாவதாக ஒரு —— கண்டார்.
4. தியான வழியாக உண்மையான —— பெற்றார்.
5. சிறுபராயத்திலே புத்தரும்——சமயத்தையே பின்பற்றினவர்.

---

## 5. அசோகன்.

புத்தரின் மரணத்திற்கு இருநூறு வருஷங்களுக்குப் பின் இந்தியாவின் பெரும்பகுதியை ஆண்ட மன்னன் அசோகனாவன். இவன் மௌரியவம்மிசத்தில் மூன்றாவதும் மிகவும்கீர்த்தி வாய்ந்தவனுமான சக்கரவர்த்தியாவன். பட்டாபிஷேகம் செய்த பன்னிரண்டாம் வருஷத்திலே

இவன் கலிங்க தேசத்தின்மீது படையெடுத்துப் போர்புரிந்தான். இப்போரிற் கண்ட கோரக் காட்சிகள் இவன் மனதை யுருக்கிவிட்டன. யுத்தத்தினுல் விளையும் சேதங்களைக் கண்டபின்னர் வாளால் வெற்றிபெறுவதிலும் தருமத்தினுல் ஜயமடைவதே சிறந்ததென்னும் தீர்மானங்கொண்டான்.



பௌத்த தாகபா

௨. அசோகன் தருமவழியில் முயற்சிகள் செய்யத் தொடங்கினுன்; என்றுலும் இராச்சிய பாரத்தை நீக்கிக் காட்டுக்குச் சென்று சந்நியாசியாகவில்லை. தன் அரசியற் பதவியிலிருந்து கொண்டே தம் ஆட்சிக்குட்பட்டவர் மூலமாயும் தம் பொருளைச் செலவழித்தும் தரும விஷயங்களைச் செய்தான். புத்தரின் பின் அவரின் உபதேசங்களைக் குறித்து வாக்கு வாதங்கள் எற்பட்டன. வாக்கு வாதங்களின் பலனுகக் கட்சிகளும் அபிப்பிராய பேதங்களும் ஏற்பட்டன. இக்கட்சி பேதங்களைத் தீர்க்க அசோகன் காலத்திற்கு முன்னரே இரண்டு மகாசபைகள் கூட்டப்பட்டன. அசோக

மன்னனும் மூன்ருவது சபையை பாடலிபுத்திரம் என்னும் நகரில் கூட்டுவித்தான். இதன் பலஞக சமயத்தின் போதனைகளைக் குறித்த ஐயங்கள் நீக்கப்பட்டன.

3. அசோக மன்னனுக்குப் புத்தசமயத்தைப் பல தேசங்களிலும் நாட்டவேண்டுமென்ற அவா உண்டானது. ஆகவே தன் சுற்றமித்திரர்களையே பல தேசங்களுக்கும் தூதுவர்களாக அனுப்பினன். இவன் காலத்தில் புத்தசமயம் போதிக்கத் தூதுவர், இலங்கை, பர்மா, சீயம் முதலிய தேசங்களுக்குச் சென்றனர்.

4. அசோகன் இந்தியாவில் அரசாள இலங்கையில் தேவநம்பியதீசன் அரசாண்டான். இவ்விரு மன்னரிடையில் நட்பு உண்டு. ஆகவே அசோகனின் புதல்வனை மகிந்தன் இலங்கைக்குப் புத்தசமயத்தைப் போதிக்க வந்தான். தீசனும் மகிந்தனை மகிழ்ச்சியுடன் உபசரித்து வேண்டிய உதவிபுரிந்தான். சிலகாலத்தின்பின் மகிந்தனின் சகோதரி சங்கமித்தையும் இலங்கைக்கு வந்து இங்குள்ள பெண்களுக்குப் போதித்தாள். விரைவில் இலங்கை வாசிகளிற் பலர் புத்தசமயத்தைத் தழுவினர். இவர்களிருவரும்தான் இன்றும் அனுராதபுரத்திற் காணப்படும் வெள்ளரசமரத்தின் கொம்பரை இந்தியாவிலிருந்து கொண்டு வந்து நட்டார்கள். இன்றைக்கும் சிங்களவரிற் பெரும்பாலார் புத்தசமயத்தையே அனுசரிக்கிருர்கள்.

5. அசோக மன்னன் தனது பிரசைகளின் நன்மைக்காக மிகவும் முயற்சி செய்தான். தெரு

வோரங்களில் வழிப்போக்கருக்குத் தங்குமடங்கள் கட்டுவித்தான். இலவச சிகிச்சை பெறக்கூடிய வைத்தியசாலைகளை ஸ்தாபித்தான். அகிம்ஸா தருமத்தை நிலைநாட்ட முயன்றான். ஆகையால் இவன் அழியாப் புகழடைந்தது ஆச்சரியமா?

## அப்பியாசம்.

1. அசோக மன்னன் காலம் எப்போது?
2. அசோகன் எதனால் தருமசிந்தனை யுடையவனாக வந்தான்?
3. புத்த மகாசபைகள் ஏன் கூட்டப்பட்டன?
4. அசோகமன்னன் காலத்திருந்த இலங்கை மன்னன் யார்?
5. இலங்கையிற் புத்தசமயத்தைப் பரப்பியவர் யார்?

பின்வரும் வாக்கியங்களை நிரப்புக:-

1. இப்போரிற் கண்ட——இவன் மனதை உருக்கி விட்டன.
2. புத்தரின்பின் அவரின் உபதேசங்களைக் குறித்து——ஏற்பட்டன.

---

# 6. கிரேக்கர்.

ஐரோப்பாவின் தென்பகுதியிலே மத்திய தரைக் கடலருகே கிறீஸ் என்னும் தேசம் உண்டு. இத்தேசத்தில் வசிக்கிறவர்களை "கிரேக்கர்" என்று அழைப்பர். கிரேக்கர் மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னரே சிறந்த நாகரீகமுடையவர்களாக விளங்கினர். இவர்களிடமிருந்தே பின்னர் உரோமர் பல கலைகளையும் கற்றறிந்தனர்.

2. பண்டைக் காலத்திலே கிரேக்கர் ஒரு அரசன் ஆட்சிக்கு உட்பட்டிருக்கவில்லை. கிரீஸ் தேசத்திலே உள்ள ஒவ்வொரு நகரமும் ஒரு சிறு இராச்சியமாயிருந்தது. ஒரு நகர இராச்சியத்தின் சனத்தொகை ஐயாயிரம் எனலாம். ஆனாலும் எல்லா மனிதருக்கும் சம உரிமைகள் இல்லை. இவர்களிற் பலர் அடிமைகளாக இருந்தார்கள். கிரேக்கர் தமது அடிமைகளை அன்பாக நடத்தினர். என்றாலும் அவர்களுக்கு அரசியல் விஷயங்களில் கலந்துகொள்ளும் உரிமையைக் கொடுக்கவில்லை. அரசாங்கம் நடத்தும் பொறுப்பு பிரபுக்கள் வகுப்புக் குரித்தாகவே இருந்தது.

3. கிரேக்கரின் உன்னத காலம் ஆயிரம் வருஷங்கள்வரை நீடித்திருந்தது. கிறீஸ்துவுக்கு நானூறு வருஷங்களுக்கு முன்னர் கிரேக்கருக்கும் பாரசீகருக்கு மிடையில் பெரும் போர் உண்டானது. பொதுவாக கிரீஸிலுள்ள நகர இராச்சியங்களிலுள்ளோர் ஒற்றுமையில்லா திருந்தபோதும் எதிரியைக் கண்டவுடன் ஒருங்கு சேர்ந்து எதிர்த்துத் தோற்கடித்தனர். இவ் வெற்றிக்குச் சில வருஷங்களுக்குப்பின் மகா அலெக்ஸாண்டர் என்னும் கிரேக்க அரசன் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா என்னும் கண்டங்களி லுள்ள பல தேசங்களைக் கைப்பற்றிக் கிரேக்கரின் மகிமையை ஸ்தாபித்தான். இவ் வரசன் கி. மு. 327-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்



மஹா அலெக்சாண்டர்

தானென்று சரித்திரம் கூறுகிறது. இவன் இறந்தபின் இவனுடைய பெரிய இராச்சியம் சீர் குலைந்துவிட்டது

4. எல்லா விஷயங்களிலும் கிரேக்கர் அழகையே விரும்பினர். கிரீஸிலுள்ள ஸ்பாற்ரு என்னும் நகரவாசிகள் தம் தேகத்தை அழகுற விருத்தி செய்வதற்குப் பலவகைக் கடினமான தேகாப்பியாசங்களைச் செய்தனர். நாலு வருஷத்துக்கொருதரம் கிரேக்க ரெல்லாரும் ஒலிம்பியா என்னு மிடத்தில் பெரிய விளையாட்டுக் கொண்டாட்டம் நடத்தினர்கள். இவ்விழாவால் அவர்களுக் கிடையில் ஒற்றுமை உணர்ச்சி ஒருவாறு ஏற்பட்டது.

5. கிரேக்கர் பலவிதமான அழகான கட்டடங்களையும் கட்டினர்கள். சூரிய ஒளியிற் பிரகாசிக்கக்கூடிய பளிங்குக் கற்களையும் கட்டட வேலையில் உபயோகித்தனர். கல்லுருவங்கள் செய்வதிலும் இவர்கள் மிகவும் சிறந்தவர்கள்.



பிளேற்றே

6. கிரேக்கருட் பலர் அறிவாளிகளாக இருந்தனர். கிரேக்கரே முதலாவதாகச் சரித்திர வரலாறு எழுதினர். முதலாவதாகப் பூமியின் படத்தைச் சித்திரித்ததும் தொலமி என்னும் கிரேக்கனே. பொய் விளக்கங்களைப் போக்கடிக்க சோக்கிறற்றீஸ் என்னும் கிரேக்கன் முயற்சி செய்தார். இவர் மாணுக்கனனை பிளேற்றோ என்பவரும் ஒரு பிரபலஞானி. கிரேக்கர் உலகின் அறிவை வளர்க்க முயன்றதற்காக நாம் அவருக்குக் கடமை யுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

### அப்பியாசம்.

1. கிறீஸ் தேசம் எங்கிருக்கிறது?
2. நகர இராச்சிய மென்றுல் என்ன?
3. மகா அலெக்ஸாண்டரைப்பற்றிச் சில வசனங்கள் கூறுக.
4. ஒலிம்பிய விளையாட்டுக்களால் வந்த நன்மைகள் எவை?

பின்வரும் வாக்கியங்களை நிரப்புக:

1. இவர்களிடமிருந்தே பின்னர்——பல கலைகளையும் கற்றறிந்தனர்.
2. இவர்களிற் பலர்——இருந்தார்கள்.
3. கிரேக்கரின்——ஆயிரம் வருஷம்வரை நீடித்திருந்தது.
4. கிரேக்கர், எல்லா விஷயங்களிலும்——விரும்பினர்.

---

## 7. உரோமர்.

இத்தாலி தேசத்திலே உரோமாபுரி என்னும் நகரமிருக்கிறது. இதில் வசிப்பவர்களையே உரோமர் என்று அழைப்பர். இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னர் உரோமாபுரி கட்டப்பட்டது. இயற்கை அரணுக அதைச் சுற்றிவர ஏழு மலைகள் இருந்தன. பின்னர் அரசர் அப்பட்டினத்தைச் சுற்றிவர மதில்களையும் கட்டினர்.

2. உரோமர் கிரேக்கருக்குப் பின்னரே நாகரீகச் சிறப்புப் பெற்றனர். இவர்கள் பல விஷயங்களைக் கிரேக்கரிடமே கற்றறிந்தனர். கிரேக்கரிலும் பார்க்க இவர்களிடத்து முரட்டுத்தனம் கூடவிருந்தது. கிரேக்கர் தமது அடிமைகளை அன்புடன் நடத்திஞர்கள். ஆனல் உரோமர் தமது அடிமைகளைத் தயவுடன் நடத்தவில்லை. இவர்கள் கிரேக்க

நூல்களைக் கற்றனர். கிரேக்கரின் தெய்வங்களையே இவர்களும் வணங்கினர். இவர்களுடைய பாஷை இலத்தீன் என அழைக்கப்படும்.

3. உரோமாபுரி தொடங்கிய காலத்திலே அரசர் தான் ஆண்டுவந்தனர். இருநூற்றைம்பது வருஷங்களுக்குப் பின் வந்த அரசனொருவனின் கொடுங்கோல் ஆற்றாமல் சனங்கள் கலகமிட்டனர். பின்னர் அரசர் ஆட்சி வேண்டாமென்று விலக்கினார்கள். பின்னர் குடிசன ஆட்சி முறையில் வருஷம் வருஷம் இரு தலைவர்களையும் ஒரு ஆலோசனைச் சபையையும் தெரிவு செய்தார்கள். இதன்மூலம் அரசியல் விஷயங்களை நடத்துவித்தனர்.


யூலியஸ் சீஸர்

4. இற்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே உரோமர் ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களையும் கைப்பற்றத் தொடங்கினர். இவர்களின் சேனாபதிகள் பல தேசங்களை வெற்றிகொண்டனர் இவர்களுள் ஜூலியஸ் சீஸர் என்பவன் பிரசித்தி பெற்றவன். இவனே முதலாவராக இங்கிலாந்தின்மீது படையெடுத்த உரோமவீரன். இவன் படையெடுத்தபின் இங்கிலாந்து நூறு வருஷமளவில் உரோமர் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தது. இங்கிலாந்தைவிட, பிரான்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி முதலிய தேசங்களையும் உரோமர் ஆட்சிபுரிந்தனர்.

5. உரோமர் இருபெரும் வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். பிரபுக்களை ‘பாட்ரிஸியன்ஸ்’ என்றும், சாதாரண மனிதரை ‘பிளெபி

யன்ஸ்' என்றும் அழைப்பர். பிரபு வகுப்பினர் பல விதமான சௌகரியங்களைத் தமக்காக ஆக்கினர். பட்டாடைகளையும் வாசனைத் திரவியங்களையும் முத்துமாலைகளையும் அணிந்தனர் 'குற்றேவல் செய்ய அடிமைகளை உபயோகித்தனர். 'வில்லா' என்னும் பெரிய மாளிகைகளில் வசித்தனர். இவர்கள் சுகசீவியத்திற் பிரியமுள்ளவர்கள் என்பது வெளிப்படை.

6. இவர்கள் கட்டட வேலைகளிலும் நிபுணர். பல அழகான கோட்டைகள், மதில்கள் கட்டினர். தாம் வசிப்பதற்குச் சிறந்த மாடமாளிகைகளைக் கட்டினர். இவர்கள் ஸ்நானம் செய்வதற்கமைத்த அறைகளும் பிரசித்திபெற்றவை இவர்களிற் பெரும்பாலார் கமத்தொழில் செய்பவராயிருந்ததினுல் நீர்ப்பாய்ச்சுவதற்கேற்ற வாய்க்கால்களையும் தோண்டினர். போக்குவரவுக்கு நல்ல வீதிகளையும் அமைத்தனர்.

7. உரோமரும் கிரேக்கரும் இந்தியாவுடனும் இலங்கையுடனும் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே வியாபாரம் நடத்தினுர்களென்று சரித்திரம் கூறுகிறது. இவர்கள் இங்கிருந்து முத்துக்கள், மயில்கள், கறுவா முதலியன கொண்டு சென்றனர். இவர்கள் இலங்கைக்கு வந்தனரென்பதற்கு அத்தாட்சியாக இலங்கையில் பல கிரேக்க உரோமன் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் எங்களுக்கும் ஐரோப்பியருக்கும் பழங்காலத்திலேயே தொடர்பு ஏற்பட்டது என்று துணிவாகச் சொல்லலாம்.

## அப்பியாசம்.

1. உரோமாபுரியைப்பற்றிச் சில வசனங்கள் கூறுக.
2. உரோமருக்கும் கிரேக்கருக்கும் உள்ள தொடர்பு என்ன?
3. உரோமர்அரசர்ஆட்சியைஎப்போதுகைவிட்டனர்?
4. இதன் பின் எந்த முறையை அனுசரித்தனர்?
5. உரோமர் எந்தத் தேசங்களை ஆண்டனர்?
6. இங்கிலாந்தின்மீது முதலாவதாகப் படையெடுத்த வீரன் யார்?
7. இங்கிலாந்து எவ்வளவுகாலம் உரோமரின் ஆட்சிக் குட்பட்டிருந்தது?
8. உரோமரும் கிரேக்கரும் ஏன் இலங்கைக்கு வந்தனர்?

---

## 8. முகம்மது நபி.

அராபியா தேசத்திலே மெக்கா என்னும் நகரிலே இற்றைக்கு ஆயிரத்துநானூறு வருஷங்களுக்கு முன்னர் முகம்மது பிறந்தார். இவர் ஒரு வறிய குடும்பத்திலே பிறந்தவர். சிறுபராயத்தில் பேரனுடனும் தகப்பனின் சகோதரனுடனும் இருந்து காலம் கழித்தார் இவர் அதிகம் கற்கவில்லை.

2. வாலிபப்பராயம் அடைந்தவுடன் தன் சீவனத்திற்காக உழைக்கத் தொடங்கினர். கதீசா என்னும் ஒரு பணக்கார விதவையின் கணக்கராயமர்ந்தார். இவர் தன் வேலையைக் கவனமாகவும் நேர்மையாகவும் பார்த்தபடியினுல் கதீசா இவர் மீது அன்பும் விசுவாசமும் கொண்டாள். சில

வருஷங்களின் பின் கதீசா வயதிற்கு மூத்தவளா யிருந்தபோதிலும் முகம்மது அவளை மணந்தார். விவாகத்தின் பின் இவருக்குச் செல்வாக்குக் கூடியது.

3 அக்காலத்திலே அராபியரின் வாழ்க்கை முறையில் அநேக பிழைகள் இருந்தன. அராபியர் பல தெய்வங்களையும் விக்கிரகங்களையும் வணங்கினர். அவர்கள் உருசிகரமான உணவை யுண்டு, மதுபானத்தை அருந்தி களியாட்டங்களிற் காலங் கழித்தனர். இந்தச் செயல்களை முகம்



பள்ளிவாசல்

மது கண்டு சகிக்க முடியவில்லை. இவர் சில திருத்த முறைகளைப் போதித்தார். இவருடைய போதனைகளைச் சிலர் ஏற்றனர். பலர் இதனால் முகம்மதுமீது கோபங் கொண்டனர். இக்கோபத்தின் பலனாகச் சிலர் முகம்மதைக் கொலைசெய்ய ஆயத்தஞ் செய்தார்கள். இதை அறிந்து முகம்மது தன் குடும்பத்துடன் மெதீனா என்னும் நகரத்திற்கு இரகசியமாக ஓடினார்.

4. முகம்மது மெக்காவிலிருந்து மெதீனாவுக்குப் போனதை ஒரு விசேஷ சம்பவமாக மூஸ்

லீம்கள்கருதுகின்றனர். இதை அல்ஹிஜ்ரு என்று அழைப்பர். மெதீனுவில் முகம்மதுவின் போதனைகளைப் பலர் பின்பற்றினர். வெகுவிரைவில் அவர் ஸ்தாபித்த சமயம் அராபியா முழுவதும் பரவிற்று. முகம்மது இறந்தபின்னர் அவரின் சமயத் தலைவரான காலிப்புகள் இவரின் போதனைகளைப் பல தேசங்களில் பரப்பினர். இக்காலிப்புகள் சமயத்தைப் பரப்பினதோடு பல தேசங்களையும் வெற்றிகொண்டு ஆட்சிபுரிந்தனர்.

5. முகம்மது போதித்த சமயத்தை 'இஸ்லாம்' என்று அழைப்பர் அவருடைய போதனைகள் எழுதப்பட்ட புத்தகம் ஹதீஷ் எனப்படும். இலங்கையிலே முஸ்லிம் கோயில்களை 'பள்ளிவாசல்' என்கின்றனர். இந்தியாவிலே இவற்றை மஸ்ஜிட் என்று அழைப்பர். இஸ்லாமியர் மதுபானம் குடிக்கப்படாதென்பது முகம்மதுவின் கட்டளை. அவர்கள் விக்கிரகங்களை வணங்கக்கூடாது. ஒவ்வொருநாளும் ஐந்துமுறை செபம் செய்தல் வேண்டும். ஒவ்வொருவனும் தன் சீவியகாலத்திலொரு முறையாவது மெக்காவுக்கு யாத்திரை செய்யவேண்டும். இவையே முகம்மதுவின் பிரதானமான போதனைகள்.

## அப்பியாசம்

1. முகம்மது எங்கே பிறந்தவர்? எப்போது?
2. கதீசாவைப் பற்றிச் சில வசனங்கள் கூறுக.
3. அக்காலத்து அராபியரின் வாழ்க்கை முறைகளில் முகம்மது என்ன பிழைகளைக் கண்டார்?
4. முகம்மது ஏன் மெக்காவிலிருந்து மெதீனுவுக்குப் போனுர்?
5. முகம்மதுவின் போதனைகளிற் சில கூறுக.

பின்வரும் வாக்கியங்களை நிரப்புக:-

1. இவர் தன் —— கவனமாகவும் நேர்மையாகவும் பார்த்தார்.
2. இவருடைய —— சிலர் ஏற்றனர்.
3. இதை —— என்று அழைப்பர்.
4. ஒவ்வொருநாளும் ஐந்துமுறை —— செய்தல் வேண்டும்.
5. அல்ஹிஜ்ரு என்ருல் என்ன?

---

## 9. முஸ்லிம்கள்

முகம்மது போதித்த சமயம் இந்தியாவிற்கு இற்றைக்கு ஆயிரத்து இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன் வந்தது. முதல் இஸ்லாம் வடமேற்கு இந்தியாவிற் பரவியது. பின்னர் பல பாகங்களுக்கும் பரவத் தொடங்கியது. இத்துடன் இந்தியாவுடன் அராபியா வியாபாரம் செய்யத் தொடங்கிற்று. சில அராபியர் வியாபாரத்திற்காக இந்தியாவில் வந்து குடியேறினர். இவர்களிற் சிலர் இந்தியப் பெண்களை மணந்தனர். தென் இந்தியாவிலே வந்து குடியேறின அராபியரின் சந்ததியாரைத்தான் முஸ்லிம்கள் என்று அழைக்கின்றனர்.

2. இலங்கைக்கு முஸ்லிம்கள் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் வந்தனர். வியாபார நிமித்தம் இவ்விடம் வந்தவர்களாதலால் அநேகமாகக் கரையோரங்களிலே குடியேறினர். இவர்கள் வியாபாரத்தால் இலாபமடைவதைப் பார்த்துச் சகிக்க முடியாமல் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் இவர்களுடன் இடையிடையே சண்டை செய்த

னர். ஆங்கிலேயர் ஆட்சிவந்த பின்னரே முஸ்லிம் கள் கஷ்டமில்லாமல் வியாபாரம்செய்யத்தக்கதாக இருக்கிறது.

3. முஸ்லிம்கள் எல்லாரும் இஸ்லாம் மதத்தையே அனுசரிப்பவர். நாங்கள் முஸ்லிம்கள் என்னும்போது பல சாதியாரைக் குறிக்கின்றோம். மலாயர், வட இந்திய பாய்மார், யாவகர் முதலியோரையும் முஸ்லிம்கள் என்றே அழைக்கின்றோம்.



முஸ்லிம் குடும்பம்.

இதற்கு ஒரு தகுந்த நியாயம் உண்டு. இச்சாதியினர் எல்லாரும் இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுகிறவர்கள். சமய ஒற்றுமையைத் தவிர வேறு விதங்களில் வித்தியாசங்கள் பல உண்டு.

4. இலங்கையிலுள்ள முஸ்லிம்களில் அநேகர் தமிழையே தாய்ப்பாஷையாக உடையர். சிங்கள

வர் வசிக்கும் பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் தமிழும் சிங்களமும் பேசுவர். இவர்களிற் பெரும்பாலார் வியாபாரம் செய்கிறார்கள். சிலரிற் சிலரே உயர்தரக் கல்வி பயின்று அரசாங்க உத்தியோகத்தராயிருக்கின்றனர்.

5. முஸ்லிம்கள் சாரம் என்னும் உடையையே அணிவர். தலையிற் குஞ்சமுள்ள சிவத்தக் குல்லாக்களைத் தரிப்பர். இவர்கள் வணங்கும்போது கூடத் தொப்பியைப் போட்டிருப்பர். இவர்கள் பெண்களை அதிகம் போக்குவரவு செய்ய விடுவதில்லை. முஸ்லிம் பெண்கள் வெளியிற் செல்லும்பொழுது முக்காடிட்டுச் செல்வார்கள். இக்காலத்திற் கேற்ப சில மாற்றங்கள் இவர்கள் மத்தியில் வந்துவிட்டன. முஸ்லிம் பெண்கள் கல்விகற்று உத்தியோகம் பார்க்கவும் எண்ணங் கொண்டிருக்கிறார்கள். வாலிபரிற் சிலர் 'பெஸ்' தொப்பியைத் தள்ளிவிட்டு விட்டார்கள். இவர்களும் சில புது முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

## அப்பியாசம்

1. இந்தியாவில் இஸ்லாம் சமயம் எப்போது பரவத் தொடங்கியது?
2. முஸ்லிம்கள் இலங்கைக்கு எப்போது வந்தனர்? ஏன் வந்தனர்?
3. நாம் முஸ்லிம்கள் என்று யாரை அழைக்கின்றோம்? நாம் இப்படி அழைப்பது சரியா?
4. முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களைக் கூறுக.

பின்வரும் வாக்கியங்களை நிரப்புக:-

1. இவர்களிற் சிலர் —— பெண்களை மணந்தனர்,

2. ஆங்கிலேயர் ஆட்சி வந்தபின்னரே முஸ்லிம்கள் —— வியாபாரஞ் செய்யத்தக்கதாக இருந்தது.
3. இலங்கையிலுள்ள முஸ்லிம்களில் அநேகர் —— தாய்ப்பாஷையாக உடையர்.
4. இக் காலத்திற் கேற்பச்சில —— இவர்கள் மத்தியில் வந்துவிட்டன.

---

## 10. சீனர்.

ஆசியாக்கண்டத்திலே மிகவும் நாகரீகம் படைத்த சாதியாருள் இந்தியரும் சீனரும் மிகப் பெயர் பெற்றவர்கள். சீனர் 4000 வருஷங்களுக்கு முன்னர் சீர்திருத்த மடைந்திருந்தனர். ஆதியில் அவர்களுடைய தேசத்துடன் வேறு தேசங்கள் தொடர்பு இல்லாமலிருந்தன. புத்த சமயம் சீன தேசத்திற்குப் பரவிய பின்னர் சீனரும் இந்தியரும் கொண்டாடத் தொடங்கினார்கள். சீனரிற் பலர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பௌத்த நூல்களைப் படிக்க வந்துள்ளனர். இவர்களிற் பாகியன், யுவன்சிவாங்கு முதலியோர் தம் பிரயாணங்களைப் பற்றிய விவரங்களைப் புத்தகமாக எழுதினர். இவ் வரலாறுகளிலிருந்து இந்திய இலங்கைச் சரித்திரத்தைப்பற்றி நாம் அறியக் கூடியதாயிருக்கிறது.

2. இற்றைக்கு இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னே கொன்பூசியஸ் என்னும் அறிவாளி சீனவிலிருந்தார். இவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தும் நன்றாகக் கல்வி கற்றார். இளமைப்பராயம் தொடக்கம் இவர் சன்மார்க்க போதனை செய்து வந்தார். வாலிபத்திலே புத்த

கங்களை வெளியிடுவித்துச் சீவனஞ் செய்தார். பின்னர் உயரிய அரசாங்கப்பதவி யடைந்தார். ஆனாலும் ஓய்வான வேளைகளில் மனிதருக்கு உபதேசம் செய்யும் தொழிலைக் கைவிடவில்லை. இவருடைய சீவியகாலத்திலேயே பல சீஷர் இவரைப் பின்பற்றினர். தந்தை தாய் பேண், குரு முதலியோரை வணங்கு என்பன போன்றவை இவருடைய போதனைகள். இவரிறந்தபின்னர். இவரின் சீஷர் இவரைத் தெய்வமாக மதித்து



சீனப் போர்வீரன்



சீனப் புடைவை வியாபாரி

வணங்கி வருகின்றனர். இன்றைக்கும் சீனரிற் பலர் புத்த சமயமும் கொன்யூசியஸ் போதித்த சமயமும் கலந்து உண்டான சமயத்தைப் பின்பற்றுகிறார்கள்.

3. சீனா ஒரு பெரிய தேசம். அதில் பல பெரிய மலைகளும் நதிகளும் உள சீனதேசத்திற் சில பகுதிகளில் சனங்கள் தோணிகளையே வீடாகப் பாவித்து வாசம் செய்கிறார்கள். இவர்கள் இடையிடையே தரையிற் கால் மிதிப்பதொழிய மற்றும் வேளைகளில் நதிகளிலேயே காலங்கழிப்

பர். இவர் சோறும் மீன் கறியையும் பெரும்பாலும் புசிப்பர். தரைப்பகுதிகளில் வசிக்குஞ் சீனர் கமஞ் செய்து தானியங்களை விளைவிப்பர். வட சீனவில் கோதுமையும், தென் சீனவில் நெற்பயிரும் பயிரிடுவர். சீனர் பலவித மாமிசங்களை உண்பர்.

4. சீனர் மிகவும் பழங்காலத்திலேயே விஷயங்களை அறிந்திருந்தனர். இவர்கள் பட்டாடை நெசவு செய்து அணிந்தனர். இவரே முதலாவதாக மாலுமிகளின் திசைகாட்டும் கருவியைக் கண்டுபிடித்தனர். வெடிமருந்தையும் இவர்களே முதலாவதாகக் கண்டுபிடித்தனர். இப்போதும் பட்டாசுக்கட்டைச் சீனவெடி என்று அழைக்கிறோமல்லவா? சீன தேசத்திலே பழங்காலத்திலேயே தபாற் போக்கு வரவுக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டன. ஆகவே சீனரின் நாகரீகம் சிறப்பானதென்று சொல்லலாம்.

5. சீனர் மொங்கோல் என்னும் சாதியினர். இவர்களுடைய தலைமயிர் நேரியதாயும், மூக்குத் தட்டையாகவும், கண் சிறியதாகவும் இருக்கும். ஆதிகாலந் தொடங்கி 1912-ம் ஆண்டு வரைக்கும் சீனவிலே அரசர் ஆட்சி புரிந்து வந்தனர். இக்காலத்திலே சீனவில் குடியரசு முறைப்படி ஆட்சி நடைபெறுகிறது. சீன பெரிய தேசமானதாலும், ஒற்றுமையில்லாமையாலும் இப்போது உன்னத நிலையை அடையாமலிருக்கிறது. ஜப்பானியரும் சீனவைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர். ஆகையால் சீனர் ஒற்றுமைப்பட்டுத் தம் தேசத்தையும் சுதந்திரத்தையும் காப்பாற்றப் பிரயாசப்பட வேண்டும்.

## அப்பியாசம்

1. சீனரின் நாகரீகம் எத்தனை வருஷங்களுக்கு முற்பட்டது?
2. சீனர் கண்டு பிடித்த பொருட்கள் சிலவற்றைக் கூறுக.
3. சீன தேசத்தில் புத்தசமயம் பரவியதன் பலன் என்ன?
4. சீனரின் சீவிய முறையைப் பற்றிச் சில வசனங்கள் கூறுக.
5. கொன்பியூசியசைப் பற்றி என்ன அறிவீர்?

---

## 11. யேசுக்கிறீஸ்துநாதர்

இற்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர் பலஸ்தீனிற் பெதிலெஹெம் என்னும் நகரில் யேசு பிறந்தார். இவருடைய தகப்பன் யோசேப்பு. தாய் பெயர் மரியாள். யோசேப்பு ஒரு தச்சன். இவர் யூதேயச் சாதியைச் சேர்ந்தவர். இவர் பிறந்த போது சில அற்புதக் காட்சிகள் தோன்றின என்பர்.

2. யேசு சிறு பராயம் தொடக்கம் தெய்வ பக்தியுடையவரா யிருந்தார். யூதேயரின் பழக்க வழக்கங்கள் யேசுவுக்கு வெறுப்பா யிருந்தது. இவர்களின் வழக்கங்களை மாற்ற யேசு முயற்சி செய்தார். இவர் ஒருமுறை நாற்பது நாளாக விரத மிருந்தார்.

3. யேசுநாதர் பல அற்புதங்களைச் செய்தாரென்று கிறீஸ்த நூல் கூறுகின்றது. ஒரு முறை

இவர் பிரசங்கம் செய்கையில் பல சனங்கள் பசியால் வருந்துவதைக் கவனித்தார். தன் சீஷரிடம் எவ்வளவு உணவு உண்டென்று விசாரித்தார். அவர்கள் ஐந்து அப்பத்துண்டுகளும் இரண்டு மீன் துண்டுகளும் இருக்கின்றன என்றனர். ஆயிரக் கணக்கான சனங்களுக்கு இவ்வளவு உணவு போதாதென உணர்ந்து, கடவுளைப் பிரார்த்தித்து அப்பத்தையும் மீனையும் சிறு துண்டுகளாகப் பகிர்ந்தார் இறைவன் அருளால் அப்பமும், மீனும் பொலிந்தன. ஆயிரக் கணக்கான சனங்கள் உண்டும் மிகுதி காணப்பட்டது எனக் கிறீஸ்த நூல் கூறுகின்றது.

4. யேசுவின் போதனைகள் யூதேயரின் பழக்க வழக்கங்களுக்கு மாறாக இருந்தபடியால், அநேகர் அவர்மீது கோபங் கொண்டனர். ஆகையால் அவர்மீது பொய்க் குற்றச் சாட்டுகள் சுமத்தினர். இதன் பலனாக அரசன் கட்டளையால் அவரைச் சிலுவையிலேற்றிக் கொன்றார்கள். இவர் இறக்கும்போது இவருக்கு முப்பத்து மூன்று வயதாகும்.

5. யேசுநாதருக்குப் பன்னிரண்டு சீடர் இருந்தனர். இவருடைய போதனைகளை இவர்கள் பரப்பினார்கள். போல் என்பவரே முக்கியமாக இவர் உண்டாக்கின சமயத்தைப் பரவச் செய்தவர். யேசுவும் சன்மார்க்கபோதனையே செய்தார். அயலானை உன்னைப்போல நேசி; பர தாரத்தை விரும்பாதே; பகைவனிடமும் அன்பு காட்டு; உண்மை பேசு முதலியனவே இவரின் போதனைகளாம். இவர் போதித்த சமயம் உலகமெங்கும்

பரவியிருக்கிறது. இலங்கையிலும் இம்மதத்தை அநேகர் ஆதரிக்கின்றனர்.

### அப்பியாசம்

1. யேசுநாதர் எங்கே பிறந்தவர்? அவர் பிறந்த போது என்ன நடந்தது?
2. யேசு செய்த அற்புதச் செயல்களில் ஒன்றைக் கூறுக.
3. யேசுவை ஏன் கொலை செய்தார்கள்?
4. யேசுவின் போதனைகளைக் கூறுக.

பின்வரும் வசனங்களை நிரப்புக:-

1. இவர்——சாதியிற் பிறந்தவர்?
2. இவர் ஒருமுறை —— நாளாக விரதமிருந்தார்.
3. உண்மையாக இச்சம்பவம் நிகழ்ந்ததோ இல்லையோ என்பது——கூற இயலாது.
4. ஆகையால் அவர்மீது——சுமத்தினர்.
5. போல் என்பவரே —— இவர் உண்டாக்கின சமயத்தைப் பரவச்செய்தார்.

---

## I2. போத்துக்கேயர்

ஐரோப்பாவிலே ஸ்பானியா தேசத்தின் மேற்கிலே போத்துக்கல் என்னும் ஒரு சிறுதேசம் உண்டு. இத்தேசத்தில் வசிப்போரைப் போத்துக்கேயர் என்று அழைப்பர். இற்றைக்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னரே பல ஐரோப்பிய சாதியினர் குடியேற்றத்திற்கும், வியாபாரத்திற்குமாகக் கப்பற் பிரயாணங்கள் செய்தனர். இப்பிரயாணங்களில் துணிவுடன் முற்பட்டுச் சென்றவர்கள் ஸ்பானியரும் போத்துக்கேயருமாகும்.

2. இந்தியா, சீன, இலங்கை முதலிய கீழைத் தேசங்களுக்கும் ஐரோப்பிய தேசங்களுக்கு மிடையே தொடர்பு 2000 வருஷங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்தது. ஆனல் முதலாவதாக ஆபிரிக்காக் கரையோரமாகக் கப்பலில் இந்தியாவுக்கு வந்தது; 'வாஸ்கோடகாமா' என்னும் போத்



வாஸ்கோடகாமா

துக்கேயனே, இவர் கலிக்கற் அரசனைக் கண்டு பல வியாபாரச் சரக்குகளைப் பெற்றுப் போத்துக்கலுக்குத் திரும்பினர். இதன்பின்னர் போத்துக்கேயர் இந்தியாவுடன் வியாபாரஞ் செய்யத் தொடங்கினர். இந்தியா, இலங்கை முதலிய தேசங்களில் கராம்பு, கறுவா, ஏலரிசி முதலிய சரக்குகள் கிடைக்குமாதலால் போத்துக்கேயர் ஆவலுடன் இவ்வூர்களுடன் வியாபாரத்தைத் தொடங்கினர்.

3. போத்துக்கேயர் இந்தியாவிலே கோவா என்னு மிடத்தைத் தம் முக்கிய நகரமாகக் கொண்டு கீழைத் தேசங்களுடன் வியாபாரம்

நடத்தினர். ஒருமுறை தற்செயலாகக் காற்றடித்ததால் இலங்கைக் கரையை அடைந்தனர். பின்னர் இத்தீவின் அரசனுடன் பேசி இவ்விடத்திலும் வியாபாரம் தொடங்கினர். முதல் இவ்வூரில் போத்துக்கேயருக்கும், முஸ்லீம்களுக்கும் போட்டி ஏற்பட்டது. பின்னர் சீதவாக்கை



போத்துக்கேய கப்பல்

அரசனுக்கும் கோட்டை அரசனுக்கும் போர் தொடங்கப் போத்துக்கேயர் கோட்டை யரசனுக்குத் துணைபுரிந்தனர். தருமபாலன் என்னும் கோட்டை யரசன் கிறீஸ்தவனாகித் தன் மரணத்திற்குப் பின்னர் தன் இராச்சியத்தையும் போத்துக்கேயருக்கு ஒப்படைத்தான். இவர்கள் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினர். கண்டி இராச்சியத்தைவிட மற்றைப் பகுதிகளை இவர்கள் எழுபது வருஷகாலம் ஆண்டனர்.

4. போத்துக்கேயரிற் பலர் இலங்கைப் பெண்களை மணந்தனர், இவர்களின் சந்ததியார் இன்னும் இங்கு காணப்படுகின்றனர். இவரை நாம் பறங்கியர் என்று அழைக்கிறோம், இவர்

கள் ஐரோப்பிய ஆடையைத் தரிக்கின்றனர். ஆங்கில பாஷையே பேசுகின்றனர். ஆனல் எங்களைப் போல் சோறு கறி சாப்பிடவும் பழகிவிட்டனர். இவர்கள் பாஷைச் சொற்கள் இப்போதும் பேச்சுவழக்கில் இருக்கின்றன.

5. போத்துக்கேயரின் ஆட்சி கொடுமையானதென்பது சிலரின் அபிப்பிராயம். இவர்கள் கிறீஸ்து மதத்தின் பிரிவாகிய உரோமன் கத்தோலிக்க மார்க்கத்தைப் பின்பற்றினர். இச் சமயத்தை இத் தீவின் பலபகுதிகளிலும் பரப்பினர். இன்றும் இலங்கையின் கரையோரங்களிற் பலர் கத்தோலிக்கரா யிருக்கின்றனர்.

6. போத்துக்கேயருக்கும், கண்டி அரசருக்கும் அநேக சண்டைகள் நடந்தன. இவை காரணமாகக் கண்டி அரசனிலொருவன் ஒல்லாந்தரையும் போத்துக்கேயரைத் துரத்தும் வண்ணம் அழைத்தான். அவர்களும் அதற் கிசைந்தனர். ஆனல் அரசனுடன் செய்த உடன்படிக்கைப்படி போத்துக்கேயரிடம் பிடித்த நாடுகளைக் கண்டி அரசனிடம் ஒல்லாந்தர் ஒப்படைக்கவில்லை. போத்துக்கேயரிலும் ஒல்லாந்தர் வலிமை படைத்தவ ராதலால் அவரைத் தோற்கடித்தனர்.

## அப்பியாசம்

1. ஐரோப்பிய சாதியினர் ஏன் பிறதேசங்களுக்குப் பிரயாணஞ் செய்தனர்?

2. கீழைத் தேசங்களுடன் வியாபாரஞ் செய்யப் போத்துக்கேயர் ஏன் ஆசைப்பட்டார்கள்?

3. போத்துக்கேயர் இலங்கையை எவ்வளவு காலமாக ஆண்டனர்?
4. பறங்கியர்களைப் பற்றிச் சில வசனங்கள் கூறுக.
5. போத்துக்கேயர் ஏன் இலங்கையை விட நேர்ந்தது?

பின்வரும் வசனங்களை நிரப்புக:-

1. ஆனல் முதலாவதாக ஆபிரிக்காக் கரையோரமாகக் கப்பலில் இந்தியாவுக்கு வந்தது——என்னும் போத்துக்கேயனே.
2. ஒரு முறை தற்செயலாகக் காற்றடித்தபடியால் ——வந்தனர்.
3. ——இத்தீவின் பல பகுதிகளிலும் பரப்பினர்.

---

## 13. ஒல்லாந்தர்

ஐரோப்பாவின் வடமேற்குக் கரையோரத்தில் ஒல்லாந்து தேச மிருக்கிறது இத்தேசம் கடல் மட்டத்திற்குப் பதிவானபடியால், வெள்ளப் பெருக்கால் சேதம் விளையாம லிருக்கப் பெரிய அணைகள் கட்டியிருக்கின்றனர். இத்தேசத்தில் வசிப்பவர்களை ஒல்லாந்தர் என அழைக்கின்றனர்.

2. இற்றைக்கு 500 வருஷங்களுக்கு முன்னர் ஒல்லாந்தர் ஸ்பானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தனர். ஸ்பானியர் கத்தோலிக்க மதத்தையே பின்பற்றினதுமன்றி அம்மதத்தைப் பலபாகங்களிலும் பரப்ப முயன்றனர். ஆனல் ஒல்லாந்தர் புரேட்டஸ்டான்ட் மதத்தை அனுசரிப்பவர். ஆதலால் ஸ்பானியரின் ஆட்சி ஒல்லாந்தருக்கு விருப்பமில்லாமல் இருந்தது. ஒல்லாந்தருக்கும்

ஸ்பானியருக்குமிடையில் சில வருஷங்களாக யுத்தம் நடந்தது. இறுதியில் ஒல்லாந்தர் சுதந்திரம் பெற்றனர். ஒல்லாந்தரைச் சுதந்திரப் போருக்கு ஏவிய தலைவன் உவில்லியம் என்னும் இராசகுமாரனே.

3. ஸ்பானியரும் போத்துக்கேயருமே முதலாவதாகப் பிற நாடுகளுக்குச் சென்றனர் என்று, படித்திருக்கிறீர்கள். இவர்களின் பின், ஆங்கிலேயரும் ஒல்லாந்தரும் பிற நாடுகளில் குடியேறவும்



யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரின் கோட்டை

வியாபாரம் செய்யவும் தொடங்கினர். இற்றைக்கு 300 வருஷங்களுக்கு முன்னர் போத்துக்கேயர் வசமிருந்த பல நாடுகளை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.

4. ஒல்லாந்தரும் இலங்கைக்கு வியாபாரம் செய்யவே வந்தார்கள். ஆனால் இவர்கள் போத்துக்கேயரிலும் பார்க்க இத்தீவின் முன்னேற்றத்திற்காக உழைத்தனர். போக்கு வரவு வசதிக்காகப் பல வீதிகளையும், வாய்க்கால்களையும்

அமைத்தனர். யாழ்ப்பாணத்திற் புகையிலைச் செய்கையைத் தொடங்கினர். சீலைகளுக்குச் சாயந் தோய்ப்பதையும் இவர்களே காட்டிக் கொடுத்தனர். இவர்களே முதன்முதல் இலங்கையில் அச்சியந்திரசாலைகளையும் அமைத்தனர்.

5. ஒல்லாந்தர் இலங்கையில் 150 வருஷமாக ஆண்டனர். இவர் பல நன்மைகளைச் செய்தன ரென்றாலும், சமய விஷயங்களிற் சில கொடுமைகள் செய்தனர். இவர்கள் தம்முடைய மதமாகிய புரொட்டஸ்டான்ட் சமயத்தைப் பரப்பினர். தம் மதத்தை அனுசரிப்பவர்களுக்கே உயர்ந்த உத்தியோகங்களை அளித்தனர். இதன் பலனைப் பலர் போலிமுறையிற் புரொட்டஸ்டான்ட் சமயத்தைப் பின்பற்றினர்.

6. ஒல்லாந்தர் இலங்கைப் பெண்களை மணஞ் செய்யவில்லை. இவர்கள் போர்த்துக்கேயரைப்போல இத் தேசச் சனங்களுடன் கலக்கவில்லை. ஒல்லாந்தரின் சந்ததியாரிற் சிலர் இப்பொழுதும் இலங்கையில் வசிக்கின்றனர். இவர்களைப் பார்த்தால் ஐரோப்பியரைப் போலவே இருப்பர். இவர்களும் ஐரோப்பியஉடை அணிந்து ஆங்கில பாஷையே பேசுகின்றனர்.

## அப்பியாசம்

1. ஒல்லாந்தரின் தேசம் எப்படிப்பட்டது?
2. ஒல்லாந்தர் எப்போது சுதந்திரம் அடைந்தனர்?
3. இலங்கையின் முன்னேற்றத்திற்காக ஒல்லாந்தர் என்ன செய்தனர்?
4. ஒல்லாந்தர் தமது சமயத்தைப் பரப்ப என்ன செய்தனர்?

பின்வரும் வாக்கியங்களை நிரப்புக:—

1. இற்றைக்கு 500 வருஷங்களுக்கு முன்னர் ஒல்லாந்தர் —— ஆட்சிக்கு உட்பட்டிருந்தனர்.
2. யாழ்ப்பாணத்திற் —— தொடங்கினர்.
3. புறச்சமயத்தவரை ——.
4. ஒல்லாந்தரின் —— சிலர் இப்பொழுதும் இலங்கையில் வசிக்கின்றனர்.

---

## 14. ஆங்கிலேயர்

நாம் இப்போது ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருக்கிறோம். ஆங்கிலேயர் இலங்கைக்கு 150 வருஷங்களுக்கு முன்னர் வந்தார்கள். முதலாவதாக அவர்கள் ஒல்லாந்தரிட மிருந்து இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றினர். 20 வருஷங்களுக்குப் பின்னர் கண்டி இராச்சியத்தையும் தமது ஆட்சிக்குட் படுத்தினர்.

2. இங்கிலாந்து தேசத்தில் வசிப்பவர்களையே நாம் ஆங்கிலேயர் என்று அழைக்கின்றோம். இவர்கள் உலகிற் பலபாகங்களை ஆண்டு வருகின்றனர். இவர்களுடைய கடற்படையே உலகிற் சிறந்ததெனை மதிக்கப்படுகிறது. இவர்களின் தேசத்தில் அரசன் இருந்தாலும் பாராளுமன்றம் என்னும் சபையாரே அரசியல் விஷயங்களை நடத்தி வருகின்றனர். ஆங்கிலேய அரசன் தான் விரும்பியபடி ஒன்றும் செய்ய முடியாதவனாக இருக்கின்றான்.

3. ஆங்கிலேயர் இந்தியாவிற்கு 350 வருஷங்களுக்கு முன்னர் வியாபாரத்திற்காக வந்தனர். பின்னர் இந்திய அரசர்களுக்கிடையில் நடந்த யுத்தங்களில் தாமும் கலந்து சிறிது சிறிதாக இந்தியா முழுவதையும் தமது ஆட்சிக்குட்படுத்தினர். வட அமெரிக்காவிலும், அவுஸ்திரேலியாவிலும், ஆபிரிக்காவிலும் ஆங்கிலேயர் குடியேறி அந் நாடுகளைத் தம்வசமாக்கினர்.

4. ஆங்கிலேயர் இலங்கையின் முன்னேற்றத்திற்காக உழைத்திருக்கின்றனர். இவர்கள் வந்த பின்னரே இலங்கையில் நல்ல தெருவீதிகள் அமைக்கப்பட்டன. இவர்களே அநேக பள்ளிக்கூடங்களைக் கட்டினர். புகையிரத வண்டிகளின் போக்குவரவையும், ஆறுசத முத்திரையுடன் தபால் போக்குவரவையும், இலவச வைத்திய சாலைகள் முதலியவற்றையும் இவர்கள் ஆரம்பித்தனர். ஆங்கிலேயரே பெரிய றப்பர் தோட்டங்களையும், தேயிலைத் தோட்டங்களையும் தொடங்கினர். இவர்களால் பல நன்மைகள் இலங்கைக்கு வந்தன.

5. ஆங்கிலேயரின் ஆட்சி புகழத் தக்கதே. இவர்கள் நீதி செலுத்துவதிற் கவனமுடையர். புறச் சமயத்தவரைக் கஷ்டப் படுத்துவ தில்லை. தாம் ஆளுந் தேசங்களிலுள்ள சனங்களின் நன்மைக்காகப் பாடுபடுபவர்கள். இவர்களின் பாஷையாகிய ஆங்கிலம் உலகத்திலுள்ள பற்பல பகுதிகளிலும் பேசப்படுகிறது. அதைப் படிப்பதால் நாமும் பல நன்மைகள் அடையலாம்.

## அப்பியாசம்

1. ஆங்கிலேயர் இலங்கையை எப்போது கைப்பற்றினர்?
2. ஆங்கில அரசனைப் பற்றிச் சில வசனங் கூறுக.
3. இந்தியாவை ஆங்கிலேயர் எப்படித் தம்வசமாக்கினர்?
4. இலங்கையின் முன்னேற்றத்திற்கு ஆங்கிலேயர் என்ன செய்திருக்கின்றனர்?
5. ஆங்கில பாஷை படிப்பது ஏன் நல்லது?

சரித்திர பாடம்

மூன்றும் புத்தகம் முற்றுப்பெற்றது.

PRINTED AT THE
SAIVA PRAKASA PRESS, 1-1-49 3000
VANNARPONNAI :: JAFFNA.